செ.வெ.எண்.73 நாள்.24.10.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் திரு.ராஜேந்திரகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் திரு.ராஜேந்திரகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (24.10.2017) நடைபெற்றது.

கூட்டத்தில், திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் அவர்கள் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு நோய் பாதிப்புள்ள இடங்களில் துரிதமாக துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டும். டெங்கு காய்ச்சல் கண்டறியப்பட்ட இடங்களில் தொடர்ச்சியாக டெங்கு கொசு புழு ஒழிப்பு, டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் துப்புரவு பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். இப்பணிகளை 100 சதவீத ஈடுபாட்டுடன் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். வடகிழக்கு பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்பாக துப்புரவு பணிகளை முழுவதுமாக முடித்திட வேண்டும். அரசு மற்றும் அரசு சார்பு கட்டடங்களில் இப்பணிகளை அந்தந்த அரசு அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை தோறும் டெங்கு தடுப்பு தினமாக அனுசரித்து தூய்மைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் டெங்கு கொசு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து தீவிரமாக டெங்கு கொசு ஒழிப்பு பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வரும் சுகாதாரப் பணியாளர்கள் வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டு வருகிறதா என்பதை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். கூடுதல் பணியாளர்கள் தேவையெனில் நியமிக்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. மாவட்டத்தில் நடைபெற்று வரும் மெகா துப்புரவு பணிகளை அதிகாலை நேரங்களில் மாவட்ட வருவாய் அலுவலர், மாநகராட்சி ஆணையாளர், நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள், ஊராட்சி செயலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மேலும், களப்பணியாளர்கள் முழுமையாக தங்களை டெங்கு கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபடுத்திட வேண்டும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொசு ஒழிப்பு புகை மருந்து போதியளவில் கையிருப்பு உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து 10 தினங்களுக்குள் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

பின்னர், திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோர் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனைக்கு சென்று காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களுக்கு அளித்து வரும் சிகிச்சைகள் குறித்து மருத்துவமனை மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் சக்தி குமார்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், சுகாதாரத்துறை அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.